# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

*************

மனு எண்: 914/2017/ஊராட்சி

ஆணை எண்: 144/2017

நாள்: 14/06/2017

பொ. முத்துசாமி,
4/17, மாரியம்மன் கோவில் மேற்கு தெரு,
ஒத்தையூர், பரளி அஞ்சல்,
நாமக்கல் மாவட்டம். – மனுதாரர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
மோகனூர் ஊராட்சி ஒன்றியம்,
நாமக்கல் மாவட்டம். – எதிர்மனுதாரர்

## ஆணை

நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஒன்றியம், பரளி ஊராட்சி, ஒத்தையூர் கிராமத்தில் வசிக்கும் திரு. பொ. முத்துசாமி, அவருடைய 8.6.2017 நாளிட்ட மனுவில் ஒத்தையூர் கிராமத்தில் பலர் வீதி நிலங்களை ஆக்கிரமித்து 20 அடி வீதியை 5 அடிக்கும் குறைவாக குறைத்ததை அடையாளம் கண்டு ஆக்கிரமிப்பை அகற்றி வீதி நிலங்களை மீட்டு பாதுகாக்குமாறு 23.1.2017 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் தனிப்பிரிவிற்கு மனு அனுப்பியதன் பேரில் பரளி ஊராட்சியில் ஒத்தையூரில் ஆக்கிரமிப்புகளை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என 10.2.2017 அன்று பதில் வழங்கப்பட்டதோடு அந்த பணி கிடப்பில் போடப்பட்டது என்றும், மீண்டும் 8.3.2017

அன்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரியதில், 3.4.2017ந் தேதியிட்ட பதில் தபாலில் ஆக்கிரமிப்பை அகற்ற கோரி எவரும் விண்ணப்பிக்கவில்லை என்று விண்ணப்பதாரரான அவருக்கு பதில் வழங்கப்பட்டுள்ளது என்றும், இந்த மாற்றத்திற்கான காரணத்தை விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. இம்மனு பரளி ஊராட்சியை சார்ந்தது ஆகும். எனவே இம்மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 14 -ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 13/6/17

பெறுநர்

பொ. முத்துசாமி,
4/17, மாரியம்மன் கோவில் மேற்கு தெரு,
ஒத்தையூர், பரளி (அஞ்சல்),
நாமக்கல் மாவட்டம் - 637 020.

நகல்

மாவட்ட ஆட்சித் தலைவர்,
நாமக்கல் மாவட்டம்,
நாமக்கல்.